


**08. 08. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. ரசாயன உரம் கடத்தல் மற்றும் பதுக்கல் நடவடிக்கைகளை தடுப்பதில் அரசு உறுதியுடன் செயலாற்றுவதாக மத்திய அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

2. தளவாடங்களின் விலை குறையும் போது நாட்டின் ஏற்றுமதி ஒன்றரை மடங்கு அதிகரிக்கும் என்று மத்திய சாலைபோக்குவரத்து அமைச்சர் திரு.நிதின்கட்கரி கூறியுள்ளார்.

3. தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கையை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று சென்னையில் வெளியிட்டார்.

4. தமிழகத்தில் 11-ம் வகுப்பு பொதுத்தேர்வுமுறை ரத்துசெய்யப் படுவதாக பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவித்துள்ளார்.

5. கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, 14 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

<u>உரங்கள்</u>

நாட்டில் ரசாயன உரம் கடத்தல் மற்றும் பதுக்கல் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக மத்திய ரசாயன உரத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணைக்கேள்விகளுக்கு இன்று பதிலளித்த அவர், உரம் தொடர்பான சட்டங்களை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்க மாநில அரசுக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளதாக கூறினார்.

மாநிலங்களில் போதுமான உரம் இருப்பை உறுதி செய்வதே உரத்துறையின் பணி என்று சுட்டிக்காட்டிய அமைச்சர், உரவிநியோக பணிகளை மாநில அரசுகளே மேற்கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

எல்லை பகுதிகளில் உள்ள மாநிலங்கள் அண்டை நாடுகளுக்கு உரம் கடத்தப்படுவதை தடுக்க உரிய கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், அனைத்து விவசாயிகளுக்கும் மானிய விலையில் உரங்கள் விநியோகிக்கப் படுவதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

பீஹார் வாக்காளர் திருத்த பட்டியல் விவகாரம் உள்ளிட்ட பல பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளிகாரணமாக மாநிலங்களவை நாள்முழுமைக்கும், மக்களவை பிற்பகல் 3 மணி வரையிலும் இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவையில் கேள்வி நேரத்தை அவைத்தலைவர் திரு.ஓம்பிர்லா இன்று நடத்த முற்பட்டபோது பீஹார் வாக்காளர் விவகார பிரச்சனையை எழுப்பி எதிர்கட்சியினர் முழக்கமிட்டதால் அவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் பிற்பகல் 3 மணி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே நிலைமை எதிரொலிக்கவே அவை நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக இரு அவைகளிலும் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 83-வது நினைவுதினத்தை ஒட்டி சுதந்திர போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலங்களவையில் இதுதொடர்பாக உரையாற்றிய அவை துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஷ், 1942-ம் ஆண்டு மகாத்மா காந்தியடிகளால் தொடங்கப்பட்ட இந்த இயக்கம் சுதந்திர போராட்டத்தில் இன்றியமையா அங்கம் வகிப்பதாக குறிப்பிட்டார்.

இவ்வியக்கமே ஆங்கிலேய ஆட்சியின் முடிவிற்கு அழைப்பு விடுக்கப்பட்ட ஒரு ஆற்றல்மிகு இயக்கமாக உருவெடுத்ததாக அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖

நிதின்கட்கரி

இந்தியாவில் தளவாட பொருட்களின் விலை, நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள், 9 சதவிகித அளவிற்கு குறையும் என்று மத்திய சாலைபோக்குவரத்து நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.நிதின்கட்கரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தனியார்த்துறை சார்பிலான மாநாட்டில் இன்று உரையாற்றிய அமைச்சர், நாடுமுழுவதும் சாலை கட்டமைப்பின் தரம் மேம்பட்டிருப்பதால் இதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக சுட்டிக்காட்டினார்.

தளவாடங்களின் விலை குறைவதால் நம் தேசத்தின் ஏற்றுமதி விகிதம் ஒன்றரை மடங்கு அதிகரிப்பதோடு, ஏற்றுமதி துறை புதிய உத்வேகத்தை பெறும் என்றும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

வேளாண் வளர்ச்சியும், அது சார்ந்த தொழில்களின் மேம்பாடும் மத்திய அரசின் உயர்முன்னுரிமை என்று எடுத்துரைத்த திரு. கட்கரி இதன்மூலம் நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்றார்.

❖❖❖❖❖❖❖

அனுப்பிரியா பட்டேல்

தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் தொழில்நுட்ப மற்றும் நிதியுதவிகளும் மாநிலங்களுக்கு வழங்கப்படுவதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதிலளித்த அவர், இவற்றை பயன்படுத்தி சுகாதார கட்டமைப்பையும், ஆள்தேர்வு, நியமன நடவடிக்கைகளையும் மேற்கொள்வது மாநிலத்தின் பொறுப்பாகும் என்று குறிப்பிட்டார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக எடுத்துரைத்தார்.

அதிகரித்து வரும் மருத்துவர்களின் தேவையை கருத்தில் கொண்டு 157 புதிய மருத்துவக்கல்லூரிகள் நாட்டில் ஏற்படுத்தபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மருத்துவ கல்லூரிகளுடன் இணைந்து செவிலியர் கல்லூரிகளும் தொடங்கப்படுவதாக கூறிய அவர், இதன்மூலம் செவிலியர்கள் போதிய அளவில் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் சுகாதார பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், உரிய ஊக்கத்தொகை அளிக்கப்படுவதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

வீரேந்திரகுமார்

எல்லைப்பகுதிகளிலிருந்து பங்களதேஷிற்கு போதைப் பொருட்களை கடந்த முயன்ற நக்சல் தீவிரவாதிகளின் முயற்சியை இந்திய ராணுவம் முறியடித்ததாக மத்திய சமூகநீதி அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திரகுமார் தெரிவித்தார்.

புதுதில்லியில் போதைப்பொருள் பயன்பாடு இல்லா பாரதம் 5-வது ஆண்டு நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், ரக்ஷாபந்தன் விழா சகோதரத்துவத்தின் பிணைப்பை எடுத்துரைப்பதாக குறிப்பிட்டார்.

ரக்ஷா பந்தன் விழா நாளை கொண்டாடப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் இருமொழிக்கொள்கையே நடைமுறைபடுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கையை இன்று வெளியிட்டு பேசியஅவர், மாணாக்கரை புதிய அறிவியல் சிந்தனைகளோடு

தொழில்நுட்பத்துடன் படைப்பாற்றல் கொண்டவர்களாக மாற்றும் வகையில் இந்த கல்விக்கொள்கை உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மாணவர்கள் அவர்கள் விரும்பும் கல்வியை பெறுவதற்கான மாநில கல்விக்கொள்கை திறந்துவைக்கும் என்றும் முதலமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கல்வி தரத்தில் உலகளவில் சிறந்து விளங்கும் வகையில் இக்கல்விக்கொள்கை வடிவமைக்கப்பட்டு உள்ளதாகவும், அனைவருக்கும் உயர்தரக்கல்வியை வழங்கவேண்டும் என்பதே இதன் முக்கிய நோக்கம் என்றும் கூறியுள்ளார்.

.. வாய்ஸ் ..

முன்னதாக அரசு பள்ளிகளில் பயின்று முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்கு செல்லும் மாணாக்கருக்கு மடி கணினிகளை வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

<u>அன்பில் மகேஷ்</u>

தமிழ்நாட்டில் நடப்பு கல்வியாண்டு முதல் 11-ம் வகுப்பு பொதுத்தேர்வு முறை ரத்து செய்யப்படுவதாக மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சென்னையில் மாநில கல்விக்கொள்கை தொடர்பாக இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாணாக்கரின் மன அழுத்தத்தை குறைக்கவும், 12-ம் வகுப்பு பொதுத்தேர்விற்கு தங்களை ஆயத்தப்படுத்தும் வகையிலும் இந்நடவடிக்கை என்றார்

8-ம் வகுப்பு வரை அனைத்து மாணாக்கரும் தேர்ச்சி என்ற திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் என்று குறிப்பிட்டார்.

கல்வி சார்ந்த தொழில்நுட்பங்களை கற்பதோடு, புரிந்துகொண்டு கற்கும் வகையிலான கல்வியை மாணாக்கருக்கு இக்கல்விக் கொள்கை வழங்கும் என்றும் அமைச்சர் கூறினார்

❖❖❖❖❖❖❖

<u>கோவி.செழியன்</u>

தமிழகத்தில் மாணாக்கரிடையே பாலின உளவியல் தொடர்பான குழு அமைக்கப்பட்டுள்ளதாக மாநில உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மாணவ மாணவிகள் இடையே இதுதொடர்பான விழிப்புணர்வை கல்லூரிகளில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

❖❖❖❖❖❖❖

சிவசங்கர்

அரியலூர் மாவட்டத்தில் கிராமப்புறங்களை நகரத்துடன் இணைக்கும் வகையில் புதிய தார்சாலை அமைக்கும் பணிகளை மாநில போக்குவரத்துதுறை அமைச்சர் திரு.சிவங்கர் இன்று தொடங்கிவைத்தார்.

உடையார் பாளையம் தழுதாலைமேடு ஆகிய கிராமங்களில் துணை சுகாதார நிலையம் அமைக்கும் பணிகளை தொடங்கிவைத்த அமைச்சர் அப்பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இரண்டு வகுபபறை கட்டுமானப்பணிகளையும் தொடங்கி வைத்தார்.

வாணத்திரையன் பட்டினத்தில் புதிய மின்மாற்றி செயல்பாட்டையும் தொடங்கிவைத்த அமைச்சர் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

காந்தி

நெசவாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை தமிழகஅரசு தொர்ந்து செயல்படுத்தி வருவதாக மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் சிறப்பு மருத்துவமுகாமை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், கைத்தறி பொருட்களின் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

திருச்சி

தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையம் சார்பில் இணையதள விளையாட்டுகளுக்கு அடிமையாகும் மாணக்கருக்கான எதிர்வினைகள் என்ற தலைப்பில் விழிப்புணர்வு முகாம் திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சரவணன் இணையதளத்தை ஆக்கப்பூர்வமான வகையில் மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருதப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், அரியலூர், மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் கனமழைக்கு சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது

.. வாய்ஸ் ..

நாளை தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், ஈரோடு, சேலம் மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖

<u>டென்னிஸ்</u>

போலந்தில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் பிரிஜ்வால் தேவ், நிதின்குமார் சின்ஹா இணை - நெதர்லாந்தின் திஜ்மன் லூ.ஃ.ப், பிரான்சின் அர்துர் ரெமாண்ட் இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖